LIBRARY
2 6 OCT 1966
STATE LEGISLATURE, MA

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Thursday, 17th March 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

பாதுகாப்பு விதிகளின்கீழ் நடவடிக்கை

* குறுகிய கால கேள்வி எண் 6.—திரு. மு. கருணாநிதி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965, 1966-ஆம் ஆண்டுகளில் பாதுகாப்பு விதிகளின்கீழ் எத்தனைச் சட்டமன்ற உறுப்பினர்கள்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது ?

(இ) என்ன காரணங்களுக்காக ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) In 1965, one M.L.A. and one M.L.C. were detained and four M.L.As. were prosecuted under the Defence of India Rules. No action was taken against any of the legislators in 1966.

(b) One M.L.A. and one M.L.C. were detained under Rule 30 of the Defence of India Rules with a view to preventing them from acting in a manner prejudicial to the public safety, the maintenance of public order, etc. Three M.L.As. were prosecuted for indulging in prejudicial acts under Rule 35 (6) read with rule 41 of the Defence of India Rules and one for causing damage to Government buildings under Rule 36 of the Defence of India Rules.

திரு. மு. கருணாநிதி : கூட்டங்களிலே பேசிய இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதில் ஒரு வழக்கில் ஒரு சட்டமன்ற உறுப்பினர் விடுதலை செய்யப்பட்டார். நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பேச்சில் எந்தக் காரணத்திற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? அப்படிப்பட்ட பேச்சு குறிப்பு என்ன என்று விளக்குவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த விவரம் என்னிடம் இல்லை. மேலும் இந்த விஷயம் வழக்கு மன்றத்தில் இருப்பதால், இதைப்பற்றி நான் விரிவாகக் கூறுவதற்கில்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : கனம் சட்டமன்ற உறுப்பினர் துறையூர் அழகமுத்து அவர்கள் மீது இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டு, தள்ளுபடி செய்யப்

பட்டிருக்கிறது என்பதிலிருந்து டி.ஐ.ஆர். இன் கீழ் எதற்கெடுத்தாலும், இம்மாதிரி வழக்குத் தொடரப்படுவது சரியல்ல என்ற உண்மையை அரசாங்கம் உணர்ந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒரு வழக்கு ஏற்பட்டால், நீதிபதிகள் தீர்ப்பு கொடுக்கிறார்கள். பலவிதமான தீர்ப்புகள் வருகின்றன. ஒரு நீதிபதி ஒரு தீர்ப்பு கொடுத்து, அதற்கு மேலே இருக்கிற கோர்ட்டில் அப்பீலில் நீதிபதி வேறொரு தீர்ப்பு கொடுப்பதும் உண்டு. ஆகையால் குறிப்பிட்ட ஒரு நீதிபதியின் தீர்ப்பை வைத்துக்கொண்டு, கனம் அங்கத்தினர் வேண்டுமானால், சில கருத்துக்களை வைத்துக்கொள்ளலாம். ஆனால், அரசாங்கத்தைப் பொறுத்தவரை ஒரு தீர்ப்பிலிருந்தே அந்த வழக்கு நியாயமாகத் தொடரப்பட்டதா என்று சொல்வதற்கில்லை. அப்படிச் சில சமயங்களில் நீதிபதிகள்கூட அரசாங்கம் அநியாயமாக இம்மாதிரி இந்த வழக்கைத் தொடர்ந்திருக்கிறது என்று கூற உரிமை இருக்கிறது. அப்படி ஏதாவது சொல்லியிருந்தால், அதைப்பற்றி விளக்கம் கூறலாம்.

திரு. மு. கருணாநிதி : கூட்டங்களில் சட்டவிரோதமாகப் பேசுவதைத் தடுப்பதற்கும், நடவடிக்கை எடுத்து வழக்கு மன்றங்களில் வழக்குத் தொடருவதற்கும் ஏற்கனவே பல சட்டங்கள் இருக்கின்றன. அப்படியிருக்கும்போது பாதுகாப்புச் சட்டத்தின் துணையை நாடவேண்டிய அவசியம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எத்தகைய பேச்சு, ஆட்சேபகரமான பேச்சு என்பதைப் பொறுத்தது பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா, இல்லையா என்பது.

திரு. இராம. அரங்கண்ணல் : எந்தெந்தக் கருத்துக்கள் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்திற்கு முரணானவை, பேசக்கூடாதவை என்று வைக்கப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றி ஒரு வரையறை இன்ன கருத்தின் மீது என்று சொல்லமுடியாது.

திரு. மு. கருணாநிதி : பேசப்படுகிற அல்லது எழுதப்படுகிற கருத்துக்கள் வெளிநாட்டவர்களுக்கு ஆதரவாக—அதாவது இந்தியாவினுடைய எதிரிகள் இந்தியாவின்மீது படை எடுப்பதற்கு ஆதரவாக இருக்கும் வகையிலே—இந்தியாவைக் காட்டிக் கொடுக்கிற வகையிலே இருந்தால்தான், அப்படிப்பட்டக் கருத்துக்களைப் பாதுகாப்புச்சட்டத்தின் கீழ் தடைசெய்ய வேண்டும். உள்நாட்டுப் பிரச்னைகள் பற்றிய கருத்துக்கள் இருக்கும் பட்சத்தில் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வரவேண்டிய அவசியம் இல்லை என்று மத்திய சர்க்கார் உள்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அப்படியானால், எந்த வகையில் அந்தப் பேச்சு குற்றம் என்று கருதப்படும் ?

17th March 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பொதுவாகக் கருத்து, பேச்சு அல்லது வேறு வேறு சம்பவங்களுக்காகப் பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்தவேண்டியதில்லை என்று மத்திய சர்க்கார் உள்துறை அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். நான் முன்பு கூறியதுபோல் என்ன வகையிலே பயன்படுத்தப்படுகிறது என்பது எத்தகைய சூழ்நிலையிலே கூறப்படுகிறது என்பதைப் பொறுத்தது. அமளி, கலவரம் இருக்கலாம். அமளி, கலவரம் இருந்தால் ஒன்று. அமளி, கலவரம் இல்லையென்றால் மற்றொன்று. இதிலேகூட உள்நாட்டுப் பாதுகாப்பிற்கு, உள்நாட்டு அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய வகையிலே இருந்தால், என்னென்ன நடவடிக்கை எடுப்பது, எந்தச் சட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்வது என்பதில் கவனம் செலுத்தப்படுகிறது.

திரு. சா. கணேசன் : நாட்டுப் பாதுகாப்பு சம்பந்தமான முறையில், பாதுகாப்பிற்கு விரோதம் இல்லாத இவற்றைக் கருதித்தான் இந்தியப் பாதுகாப்பு விதிகள் பயன்படுத்தப்படுகின்றன என்று பொருள்பட கனம் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படியானால், திரு. ராமசாமி நாயக்கர் அவர்கள் தங்களுடைய பத்திரிகையில் ரஷ்யா படையெடுத்தால், ரஷ்யாவோடு நானும் சேர்ந்துக்கொள்வேன் என்று பகிரங்கமாக எழுதி இருக்கிறார்கள். அதன் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றி கனம் எதிர்க்கட்சித் துணைத்தலைவர் முன்பு ஒரு விவாதத்தின்போது குறிப்பிட்டார்கள். அப்போது அதற்கு விளக்கம் கூறியிருக்கிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : அரசினர் நடவடிக்கைகளை விமர்சிப்பதற்கு ஜனநாயகத்தில் எதிர்க்கட்சிக்கு உரிமை இருக்கிறது. அப்படி விமர்சிப்பதுகூட இந்தியப் பாதுகாப்பிற்கு முறைகேடாகக் கருதப்படுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு அரசாங்கம் கருதவில்லை. அரசாங்கத்தினுடைய குற்றங்கள் தவறுகளை எடுத்துச் சொல்வதற்கு, இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளாது.

திரு. ஆ. கு. சுப்பையா : சமூக விரோதிகளான கள்ளக்கடத்தல் செய்பவர்கள் யார் மீதாகிலும் நம் ராஜ்ய சர்க்கார் நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று சொல்லமுடியாது. எடுத்துக் கொள்ளப்படுகிறது. யார்மீது, எங்கே என்ற விவரம் என்னிடம் இல்லை.

திரு. எம். எஸ். மணி : உள்நாட்டிலே குழப்பத்தை விளைவிக்கிற முறையில், சில காங்கிரஸ்காரர்கள் பேசிவருகிறார்கள் என்ற புகார் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படியானால் அவர்கள் மீது இந்தச் சட்டத்தின் கீழ் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

[17th March 1966

கனம் திரு எம். பக்தவத்சலம்: அவ்வாறு புகார் ஒன்றும் வரவில்லை.

தொழிற்பேட்டைகள்

*317 **கேள்வி.—திரு. மு. கருணாநிதி:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொழிற்பேட்டையில் கடந்த அக்டோபர் திங்கள் பொருள்கள் ஏதேனும் களவாடப்பட்டனவா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) & (இ) கோவில்பட்டி தொழிற்பேட்டையின் வளைவுக்குள் உள்ள பண்டகசாலைக் கொட்டகையில் 17-10-65 தேதி இரவு ஒரு திருட்டு நடந்தது. சுமார் ரூ. 416 மதிப்புள்ள 12 மில்லி மீட்டர் மிருது எஃகு கம்பிகள் 6 கட்டுகளும், 10 மில்லி மீட்டர் மிருது எஃகுக் கம்பிகள் 5 கட்டுகளும் களவாடப்பட்டன. களவுபோன பொருள்கள் அனைத்தும் பின்னர் மீட்கப்பட்டன.

திரு. மு. கருணாநிதி: இந்தக் களவு சம்பந்தமாக அந்தத் தொழில் பேட்டையினுடைய தோட்டத்தின் காவலாளி கைது செய்யப்பட்டு, அவர்தான் களவாடியதாக ஒப்புக் கொள்ள வேண்டுமென்று போலீஸ் அதிகாரிகள் வற்புறுத்த முற்பட்டதன் காரணமாக, மனமுடைந்து அவர் தற்கொலை செய்து கொண்டார் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்த மாதிரி விவரம் என்னிடத்தில் இல்லை.

'The night watchman on duty on the night of theft is reported to have been suspended from duty and that another suitable watchman from Tuticorin has been transferred and posted to Kovilpatti in his place.'

என்றுதான் இருக்கிறது. அது சம்பந்தமாகத் தனியாகக் கேள்வி போட்டால், சக போலீஸ் அமைச்சர் அவர்கள் விவரங்களைச் சொல்வார்கள்.

திரு. மு. கருணாநிதி: அவர் தன்மீது சுமத்தப்பட்ட பழிக்கு அஞ்சித் தற்கொலை செய்து கொண்டார் என்று அந்தத் தோட்டக் காவலாளியின் மனைவி உள்துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு மனு எழுதியிருக்கிறார்கள். அதை விசாரித்து நடவடிக்கை எடுப்பார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதைச் சக அமைச்சர் அவர்கள் கவனிப்பார்கள். இது சம்பந்தமாக ஜட்ஜ்மெண்டில் என்ன இருக்கிறது என்று கூற விரும்புகிறேன். வற்புறுத்தப்பட்டது என்று சொல்லுகிற காரணத்தால் ஜட்ஜ்மெண்டில் குறிப்பிட்டிருப்பதைப் படிக்கிறேன்.